# சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையிலான மோதல்களும் நல்லிணக்க முயற்சிகளும் - இலங்கையில் இடம்பெற்ற முக்கிய கலவரங்களை மையப்படுத்திய ஆய்வு

**பாத்திமா நவாஸ்தீன், பேரின்பம் சச்சிதானந்தம்**
ஒப்பீட்டுச் சமயமும் சமூக நல்லுறவும் துறை,
கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.
Mnfathima6@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

பல்லினக் கலாசாரங்கள் பின்பற்றப்படுகிற இலங்கை நாட்டில் நல்லிணக்கம் என்பது அவசியமாகின்றது என்பதனால் மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு முயன்றாலும் இடையிடையே மோதல்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கதென்றாகும். அந்தவகையில் சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் 1915ம் ஆண்டு துளிர்விடப்பட்ட மோதல்கள் யுத்தத்திற்குப் பின்னர் மிக வேகமாக அதிகரித்துள்ளதால் அவை பற்றி ஆராய்வது காலத்தின் தேவையாகவுள்ளது. அத்துடன், இரண்டாம் நிலைத் தரவுகளை ஆய்வு அணுகு முறைகளாகக் கொண்டு, நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள் என்பவற்றின் துணையுடன் இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. பல்லினக் கலாரச் சூழலில் இரண்டு இனத்தவர்களிடையேயும் இடம்பெற்ற கலவரங்கள் தனி நபர்கள், தனிக் குழுக்கள் சார்ந்ததாகத் துவங்கிப் பின்னராகச் சமூங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற விதத்திலான கலவரங்களாக மாற்றமடைந்தன. பேசித் தீர்த்துக்கொள்ள முடியுமான அநேக மோதல்கள் புரிந்துணர்வின்மை, அடிப்படைவாதச் சிந்தனைகள், இனவாதம் என்பன போன்ற பல்வேறு காரணங்களினால் பாரிய கலவரங்களாக வீரியமடைந்தன. மோதல்களால் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியாகப் பல்வேறுபட்ட பாதிப்புக்கள் ஏற்பட்டன. அத்துடன், பல்சமய உரையாடல், இளைஞர்கள் மத்தியிலான நல்லிணக்க முயற்சிகள், கல்வித்துறை சார்ந்த செயற்றிட்டங்கள், கலாசார நிகழ்வுகள் போன்ற பல்வேறுபட்ட வழிமுறைகளில் நல்லிணக்க முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. எனவே, சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் இடையிடையே பல்வேறு மோதல்களும் அத்துடன் கலவரங்களும் ஏற்பட்ட போதும் கூட நல்லிணக்கத்திற்கான முயற்சிகளின் காரணமாக இணக்கப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டன. எனவே, உரிய திட்டங்களையும், வழிவகைகளையும் மேற்கொள்வதனூடாக மோதல்கள் மற்றும் பிரச்சினைகள் இல்லாத நல்லிணக்கமான சமூகத்தினையும் சூழலையும் உருவாக்கலாம்.

***திறவுச் சொற்கள்:*** *மோதல்கள், கலவரங்கள், சமூகம், நல்லிணக்கம், பன்மைத்துவம்*

## ஆய்வு அறிமுகம்

இலங்கையின் வரலாற்றில் மிகத்தொன்மையான காலத்தில் இருந்தே துவங்கிவிட்ட இன மோதல்கள் படிப்படியாக வளர்ச்சியினைக் கண்டு, விருட்சமாகி இன்றைய நூற்றாண்டுக் காலப்பகுதியில் பாரியளவான ஒரு சமூகப் பிரச்சினையாகவே உருமாறியுள்ளது. இலங்கையின் பல்வேறு துறைகளிலும் அதிகளவிலான தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு சமூகப் பிரச்சினையாக இது அமைந்துள்ளது. எனவே, அவற்றினை அடையாளப்படுத்தி அதற்கான காரணங்களினைக் கண்டறிவதும் காலத்தின் முக்கியமான தேவையாகக் காணப்படுகின்றது.

தனியான ஒரு சமயத்தினை மட்டும் கொண்ட மக்கள் வாழக்கூடிய நாடுகளைவிடவும் பல்வேறு சமயங்களைப் பின்பற்றக்கூடிய மக்கள் வாழுகின்ற பல்லினக் கலாசாரச் சூழலினைக் கொண்ட நாடுகளில் இன ரீதியிலான மோதல்கள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன. அவ்வாறே இலங்கையிலும் பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த

மக்களும் இணைந்து வாழும் ஒரு அமைப்பே காணப்படுகின்றது. இந்நிலையில் அதிகளவிலான முரண்பாடுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய துரதிஷ்டவசமான நிலைமை காணப்படுகின்றது. இலங்கை நாட்டில் பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் என பிரதான நான்கு சமயங்கள் காணப்படுகின்றன. எனவே, பல்லினக் கலாசாரங்களைப் பின்பற்றுகின்ற நாடென்ற வகையில் பண்டைய காலம் தொட்டு நல்லிணக்கம் இருந்து வந்தாலும், மோதல்களும், கலவரங்களும் இடையிடையே இடம்பெற்றே உள்ளன.

அவ்வடிப்படையில் சிங்களவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் உறவு முறைமை பண்டைய மன்னர்கள் காலத்திலிருந்து பலமாக இருந்தாலும் பிரித்தானிய காலத்திலிருந்து பிளவுபடத் தொடங்கியது. இதனது விளைவாகவே, 1915ஆம் ஆண்டில் சிங்கள-முஸ்லிம் மோதல்கள் ஆரம்பமாகின. இதன் தொடர்ச்சியாகப் பல்வேறு கால கட்டங்களிலும் பல்வேறு மோதல்கள் இடம்பெற்றன. இவ்வாறாக, இனரீதியான மோதல்கள் தோற்றம் பெறுவதற்குப் பல்வேறுபட்ட காரணிகள் காணப்படுகின்றன. அவற்றையெல்லாம் இனங்கண்டுத் தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வது அவசியமாகும். அவ்வாறாக முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற போது இலங்கை நாட்டில் சமாதானமான மற்றும் அமைதியான சூழலை உருவாக்க முடியும்.

எனவே, சிங்கள மற்றும் முஸ்லிம் சமூகத்தவர்களுக்கிடையில் உறவுசார்ந்த நிலைகள், சிங்கள மற்றும் முஸ்லிம் இன மோதல்களின் தோற்றம், மோதல்களுக்கானக் காரணங்கள் அதேபோன்று, வன்முறைகள் மூலம் ஏற்பட்ட விளைவுகள், அவற்றை தடுக்க மேற்கொள்ளப்பட வேண்டிய உரிய நடவடிக்கைகள், நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் என்றவாறாக ஆராயப்படுகின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

பல்லின சமூகங்களைச் சேர்ந்த மக்களும் இணைந்து வாழும் நாடுகளில் பன்மைத்துவ நடைமுறைகளின் காரணமாகப் பல்வேறுபட்ட மோதல்களும் மற்றும் பிரச்சினைகளும் ஏற்பட்டு வருவதனைத் தவிர்க்க முடியாது. அந்தவகையில் பௌத்தர்கள், இந்துக்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், பறங்கியர்கள் போன்ற பல்லினங்களையும் சேர்ந்த மக்களும் இணைந்தே வாழுகின்ற நாடாகவே இலங்கை காணப்படுகின்றது. அவ்வகையில், நீண்டகால நல்வாழ்வுடன் கூடிய நல்லிணக்கமான சமூக வாழ்க்கை முறை நிலவிய ஒரு சூழலில், ஏன் இரண்டு சமூக மக்களுக்குமிடையில் மோதல்கள் ஏற்படுகின்றன? என்பது இவ்வாய்வினது பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

**ஆய்வு நோக்கம்**

நீண்டகாலமாக நிலவிய, நல்வாழ்வுடன் கூடிய நல்லிணக்கமான சமூக வாழ்க்கைச் சூழலில், இரு சமூகங்களையும் சேர்ந்த மக்களுக்கு மத்தியிலும் இடையிடையே இடம்பெற்று வந்த மோதல்கள் கண்டறிவதுடன் அவற்றை தடுத்து அவ்விரண்டு சமூகங்களுக்கிடையிலும் சகவாழ்வை ஏற்படுத்தும் நல்லிணக்க முயற்சிகளின் தேவைப்பாட்டினைக் வெளிக்கொணர்தல்.

**ஆய்வு கருதுகோள்**

‘‘பன்மைத்துவக் கலாசாரங்களைக் கொண்ட இலங்கையில் நல்லிணக்கமான சூழல் நிலவிவந்த போதும் கூட இடையிடையே இடம்பெற்ற மோதல்கள் நல்லிணக்கத்தினைப் பாதித்தன. எனவே, அவற்றிலிருந்து விடுபடுவதற்கான பல்வேறு உபாயங்களையும் நல்லிணக்க முயற்சிகளையும் இவ்வாய்வு வெளிக்கொண்டு வரும்’’.

**ஆய்வு வரையறை**

சிங்கள மற்றும் முஸ்லிம் இனத்தவர்களுக்கிடையில் 1915ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு வரையில் இடம்பெற்ற முக்கியமான கலவரங்களினையும் மோதல்களைத் தவிர்த்து நல்லிணக்கத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படுகின்ற நல்லிணக்க முயற்சிகள் குறித்தும் இங்கு ஆராயப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

இலங்கையில் வாழக்கூடிய சிறுபான்மையின மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் காணப்படுகின்றன. அதிலும் குறிப்பாக, முஸ்லிம் சமூகம் வரலாற்றுக் காலம் தொடக்கம் பாரிய இன்னல்களுக்கு முகம்கொடுத்து வருகின்றது. இவைபோன்ற விடயங்களை முஹம்மது சமீம், அ, (1998) எழுதிய ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சினைகள் என்ற நூல் எடுத்தாராய்கின்றது.

இனங்களுக்குள்ளே காணப்படும் வன்முறைகள் மற்றும் பொதுவான இன-மத வன்முறை என்பவற்றுக்கிடையில் பல உறவு முறைகள் காணப்படுவதுடன் இன-மத வன்முறைகள் என்பவை சமூகத்தின் நிலையான ஸ்திரத் தன்மையைப் பாதிக்க கூடியதாகவும் பல்வேறுபட்ட மோசமான விளைவுகளையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் அமைந்துள்ளன. இவற்றை டெனிஸ் மெக்கில்வரி “Sri Lankan Muslims between Ethno-Nationalism and global ummah", (2011) என்ற ஆய்வினூடாக விளக்குவதுடன் நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் இலகுவானதொன்றாகவும் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியதாகவும் உள்ளது. எனவே, தேசிய நல்லிணக்கத்தின் சவால்கள், அதற்கான ஆலோசனைகள், முன்னெடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கைகள் போன்றன பற்றி விளக்குகின்றது.

இலங்கையினுடைய இன முரண்பாட்டில் பௌத்த அடிப்படைவாதச் செயற்பாடுகள் தாக்கத்தைச் செலுத்தின. ஆனால் பௌத்த சமயச் சிந்தனைகள் முரண்பாட்டுக்கு வித்திட்டதா என்பது கேள்விக்குறி ஏனெனில், கௌதம புத்தரோ அல்லது அவருடைய போதனைகளோ வன்முறைகள் பற்றி போதிக்கவில்லை. அந்தவகையில் முரண்பாடுகள் பற்றிய பௌத்த சிந்தனைகளைப் பற்றியும் இலங்கையில் இன முரண்பாடுகளைத் தோற்றுவிப்பதில் பௌத்தத் தீவிரவாதக் குழுக்களினைப் பற்றியும் மஹிந்த தீகல்லே, (2003), ‘‘இலங்கையில் இன முரண்பாடுகளும் பௌத்தமும், சமாதானமும்’’, நோர்வே பௌத்த சங்கம். என்ற நூலில் எடுத்துக்காட்டியுள்ளார்.

பன்மைத்துவக் கலாசாரச் சூழலைக்கொண்ட இலங்கையில் சிறுபான்மையின முஸ்லிம் மக்களுக்கு 1915ஆம் ஆண்டு தொடக்கம் இன எதிர்ப்புக்கள் ஒரு சில தீவிரவாதக் குழுக்களால் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான பின்னணியில் Mohamed Frook Fawas, (2021), Nonviolence Response to Ethnic Conflicts : The Case of Muslims in Sri Lanka என்ற ஆய்வினூடாகச் சிறுபான்மைச் சமூகங்களுக்கு எதிரான வன்முறை, வன்முறையற்ற பதில், இனவாதத் தேசியவாதம், அஹிம்சைக் கோட்பாடுகள் போன்ற பலவேறுபட்ட விடயங்கள் விளக்கப்பட்டுள்ளதுடன் அஹிம்சையினைத் தத்துவம், உளவியல், மானிடவியல் சார்ந்த பல பார்வைகளால் நோக்குகின்றார்.

இலங்கையில் இடம்பெற்ற நீண்டகால யுத்தம் முடிவிற்கு கொண்டுவரப்பட்டாலும் கூட அதற்கு பின்னும் சமூகங்களிடையே முரண்பாடுகள் இடம்பெற்றே வருகின்றன. இந்நிலையில் சகவாழ்வு அவசியமான ஒன்றாகவே தான் காணப்படுகின்றது. அந்தவகையில் யுத்தத்தின் பின்னர் பல்லினச் சமூகங்களுக்கிடையில் சகவாழ்வு முறை எவ்வாறாகக் காணப்படுகின்றது. மற்றும் நல்லிணக்கத்திற்கான அவசியம் போன்றவற்றை ஸஜீதா, 2017, ‘‘யுத்தத்திற்கு பின்னர் இலங்கையின் இன நல்லிணக்கம்’’ என்ற ஆய்வுக் கட்டுரையினூடாக வெளிப்படுத்துகின்றார்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு இரண்டாம் நிலைத் தரவுகளைக் கொண்டு அமைந்திருப்பதுடன் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், புள்ளி விபரங்கள், ஏனைய மொழிகளிலே வெளிவந்த ஆய்வுத் தலைப்பினைச் சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள், இணையத்தளங்கள் மூலமான ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஆக்கங்கள் என்பவற்றை துணையாக கொண்டு தயார் செய்யப்பட்டுள்ளது.

**மோதல் காரணிகள்**

தேசிய மட்டத்திலாயினும் சரி சர்வதேச மட்டத்திலாயினும் சரி இடம்பெறக் கூடிய ஒவ்வொரு மோதலும் தனக்கே உரிய தனித்துவமானப் பண்புகளைக் கொண்டிருக்கும் என்ற வகையில் சிறப்பான காரணிகள் அம்மோதலின் பின்னணியில் செயற்பட்டிருக்கும். எனினும், இக்காரணிகளிலே பொதுவான அம்சங்கள் காணப்படும். இந்தப் பொதுவான பண்புகளினைக் கொண்டமைந்த வகையிலே மோதலுக்கான காரணிகளினை விளக்கும் கோட்பாடுகள் பல முன்வைக்கப்பட்டுள்ளன.

அவ்வகையில் ஒரு சமூகத்தினது அதிகாரக் கட்டமைப்பே மோதலுக்கான அடிப்படைக் காரணம் எனச் சிலர் கருதுகின்றனர், இது மோதலின் அடிப்படையில் அதிகாரத்துடன் தொடர்புபடுத்தி விளக்குவதற்கு முற்படுகின்ற ஒரு கோட்பாடாகும். எந்த ஒரு சமூகமும் அல்லது நிறுவனமும் அதனை வழிநடாத்திச் செல்கின்ற அதிகாரக் கட்டமைப்பு ஒன்றினைக் கொண்டிருக்கும். அதிகாரக் கட்டமைப்பு அதிகாரம் செலுத்தக் கூடியவர்கள், அதிகாரத்திற்கு உட்படுபவர்கள் ஆகிய இரண்டு தரப்பினர்களைக் கொண்டிருக்கின்ற நிலையில் இவ்விரு தரப்பினருக்குமிடையிலான மோதலானது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது என்பது இந்தக்

கோட்பாட்டினுடைய அடிப்படையான வாதம் ஆகும். பிசரும், சகாக்களும் மோதலுக்கான காரணிகள் சிலவற்றை அடையாளம் கண்டுள்ளனர். அவை

1. சமூக உறவுகள்
2. ஒவ்வா நிலைப்பாடுகள்
3. மனிதத் தேவைகள்
4. அடையாள உணர்வுகள்
5. கலாச்சாரங்களுக்கிடையிலான தவறான தொடர்பாடல்
6. சமூக அநீதி

அதேசமயம் ஒவ்வாத இலக்குகள் அல்லது நிலைப்பாடுகளே தான் மோதல்களைத் தோற்றுவிக்கின்றன. விதிமுறைப் பேச்சுவார்த்தைக் கோட்பாட்டின் பிரகாரம் மோதலில் ஈடுபடுகின்ற தரப்பினர் தமது இலக்குகளை முழுமையாக அடைய முற்படுகின்ற அதே சமயம் எதிர்த்தரப்பை முழுமையாகத் தோல்வியடையச் செய்ய முற்படுவதனால் இங்கு மோதல்கள் ஏற்படுகின்றன. மோதல்களுக்கான காரணங்களை விளக்குவதில் மனிதத் தேவைகள் கோட்பாடு பாரியளவு ஒரு பங்களிப்பினைச் செய்துள்ளது. மனிதர்களுக்கு மிகவும் அடிப்படையான சமூக, உடலியல் மற்றும் உளவியல் ரீதியான தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் ஏற்படுகின்ற விரக்தியின் காரணமாகவே மோதல்கள் ஏற்படுகின்றன என்பது கோட்பாட்டின் அடிப்படையாகும்.

***மோதல் குறித்து அறிஞர்களின் கருத்துக்கள்.***

A. Schellenberg, ''போட்டியான அபிலாஷை, பல்வேறுபட்ட தனித்துவங்கள் மற்றும் மனப்பாங்கு மாற்றங்கள் காரணமாக, ஆட்களுக்கு அல்லது குழுக்களுக்கிடையே உருவாகும் எதிர்ப்பாகும்'' என்கின்றார்.

Glasl, ''தனிநபர்கள், குழுக்கள், நிறுவனங்கள் போன்ற நடிகர்களுக்கிடையில் நிகழுகின்ற ஒரு இடையூடாட்டமாகும். அதாவது, சிந்தனைகள், கற்பனைகள், உணர்வுகள் என்பன பரஸ்பரம் ஒத்தியங்கவில்லை என உணரும் போது ஏற்படுவதாகும்'' என வரையறை செய்கின்றார்.

Chung & Meggison, ''இணையமுடியாத தேவைகள், விருப்பங்கள், எண்ணங்கள் நபர்கள் போன்றவற்றினிடையே ஏற்படும் போராட்டம்'' எனக் கூறுகின்றார்.

Coser, ''எதிரிகளை மட்டுப்படுத்துவதை, காயப்படுத்துவதை அல்லது அழிப்பதை இலக்காகக் கொண்ட விழுமியங்கள் மற்றும் பற்றாக்குறையினுடைய அந்தஸ்து, அதிகாரம் மற்றும் வளங்களுக்கான போராட்டமாகும்'' என்கின்றார்.

Fisher, ''தம்மிடையே ஒவ்வாத இலக்குகளைக் கொண்ட அல்லது அவ்விதமாகக் கருதும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினரிடையேயான உறவு'' என குறிப்பிடுகின்றார்.

Johan Galtung, "படிமுறையான விசைப்பண்பாகவுள்ள இதில் கட்டமைப்பு, மனப்பாங்குகள், நடத்தைகள் என்பன ஒன்றின் மீது மற்றொன்று செல்வாக்குச் செலுத்துவதுடன் தொடர்ந்தும் மாற்றமடைந்து கொண்டிருக்கும்" என்கின்றார். (சிவானந்தமூர்த்தி, 2010)

***சிங்கள - முஸ்லிம் மோதல்களின் சுருக்கமான பார்வை***

பன்மைத்துவச் சூழலைக் கொண்ட இலங்கை நாட்டில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சிக்காலப் பகுதிகளில் பௌத்தர்களுக்கும், இஸ்லாமியர்களுக்குமிடையிலான உறவானது மிகவும் நெருக்கமாகக் காணப்பட்டதை வரலாறுகள் சான்று பகிர்கின்றன. இரு சமயங்களையும் சேர்ந்த மக்களிடையிலே நல்வாழ்வுடன்கூடிய நல்லிணக்கம் இவ்வாறாக காணப்பட்ட போதிலும் கூட இடையிடையே பல்வேறுபட்ட மோதல்ளும் இடம்பெறவே செய்தன.

இலங்கையினுடைய இனமோதல் வரலாற்றில் இரத்தக்கறை படிந்த அத்தியாயம் முதன் முதலாக 1915ல் தான் எழுதப்பட்டது. சிங்கள இனத்துவச் சிந்தனையாளர்கள் மூலமாகத் தோற்றுவிக்கப்பட்ட சிங்கள மேலாதிக்கத்தின் விளைவாகச் சிங்கள மற்றும் முஸ்லிம் வர்த்தகர்களிடையே போட்டியும், விரிசல்களும் ஏற்பட்டன. முதலாம் உலக மகாயுத்தத்தின் காரணமாகப் பொருள் பற்றாக்குறை மற்றும் பணவீக்கத்தின் காரணமாக அத்தியாவசியப் பொருட்களினுடைய விலையேற்றம் நுகர்வோர் மத்தியில் விசனத்தினை ஏற்படுத்தியிருந்தது. இதனைச் சிங்கள மேலாதிக்கத் தேசியவாதிகள் முஸ்லிம்களுக்கு எதிரான பகையாக தூண்டி விட்டார்கள்.

1915ம் ஆண்டு சிங்களவர்களினது பெரஹரா ஊர்வலம் பள்ளிவாசலை கடந்து செல்கையில் அமைதியாகச் செல்லுமாறு முஸ்லிம் தலைவர்கள் கோரிக்கை விடுத்தும் அதனை பின்பற்றாததன் விளைவாக சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையில் கலவரம் மூண்டது. இக்கலவரமானது தீர்விற்குக் கொண்டுவரப்பட்ட போதிலும் முஸ்லிம்களுக்கு எதிரானப் பிரச்சாரம் தீவிரமடைந்தது. 25 முஸ்லிம்கள் கொல்லப்பட்டதுடன் 200 பேரளவில் காயமுற்றனர். பல பள்ளிவாசல்களும் தாக்கப்பட்டன. முஸ்லிம்களின் பல்வேறு உடமைகளும் அழிக்கப்பட்டுச் சேதமாக்கப்பட்டன (Johansson, 2019).

சுதந்திர இலங்கையிலும் பௌத்த தேசியவாதத்தின் செல்வாக்கு அதிகமாகவே காணப்பட்டது. "இலங்கை பன்மைத்துவ நாடாகக் காணப்பட்டாலும் சுதந்திரத்திற்குப் பின்னர் உருவாக்கப்பட்ட அரசு பன்மைத்துவத்தினைப் பிரதிபலிக்கவில்லை. மாறாகப் பெரும்பான்மைப் பௌத்தர்களின் ஆதிக்கம் நிறைந்த ஒற்றையாட்சியாகவே உருவாக்கப்பட்டது".

இவ்வாறாக, 1915ல் துவக்கி வைக்கப்பட்ட சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான மோதல்கள் இன்று வரையில் தொடர்ந்தவாறாகவே உள்ளன. அத்துடன் இரு சமூகங்களுக்குமிடையிலான மோதல்கள் 1915 கலவரத்தினைத் தொடர்ந்து 1972 மடவளைக் கலவரம், 1976 புத்தளத்தில் இடம்பெற்ற கலவரம் மற்றும் 1982 காலியில், 1999 மீயெல்லைக் கலவரம் எனக் கலவரங்கள் பலவறாகத் தொடர்ந்ததுடன் 2001 மாவனல்லையில் இடம்பெற்றக்

கலவரமும் முக்கியமான ஒன்றாக நோக்கப்படுகின்றது. இவ்வாறாக நடந்தேறிய மோதல்கள் பல்வேறு மோசமான விளைவுகளுக்கு சமூகத்தை உள்ளாக்கிவிட்டன.

இவ்வாறாகத் தொடர்ந்த ''சிங்கள முஸ்லிம் மோதல்களில் 2013ம் ஆண்டு பௌத்த அமைப்புகள் ஜமிய்யதுல் உலமாவினால் வழங்கப்படும் ஹலால் சான்றிதழ் அவசியமில்லை என்றும் அதனை தடைசெய்ய வேண்டுமென்கின்ற நோக்கிலும் 2013ம் ஆண்டினை ஹலால் ஒழிப்பு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியதுடன் முஸ்லிம்களுக்கு எதிராக 10 தீர்மானங்களை மேற்கொண்டு உலமா சபையைத் தடை செய்யவும் யோசனைகள் முன்வைத்தன''.

அத்துடன், 2014 அளுத்கமைக் கலவரம், 2018, 2019 போன்ற பல அண்மைக்காலக் கலவரங்களும் மக்கள் மனதில் மறக்க முடியாத வடுக்களைப் பதிவு செய்ததுடன் இரண்டு சமயங்களையும் சேர்ந்த சாதரண மக்களிடையில் மனக் கசப்புக்களையும் ஏற்படுத்தின. ஆரம்ப காலங்களில் சிங்கள மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் கலவரங்கள் குறித்தளவிலே நடந்தேறியிருந்தாலும் யுத்தத்தின் பின்னராக அதிகரித்தன. பௌத்தத் தேசியவாத எழுச்சி, தவறான பல கண்ணோட்டங்கள், அடிப்படைவாத அமைப்புக்கள் போன்றவற்றை இவற்றுக்குக் காரணங்களாகக் குறிப்பிடலாம்.

***சிங்கள – முஸ்லிம் மோதல்கள்***

1915 - கண்டியில் இடம்பெற்ற முதலாவது சிங்கள-முஸ்லிம் கலவரம், 1976 - புத்தளம் கலவரம், 1982 - காலி துலவத்தைக் கலவரம், 1994 - உக்ரஸ்பிட்டி கலவரம், 1996 - மடவளைக் கலவரம் 1998 - கலகெதர மடிகே கலவரம், திக்வெல்லைக் கலவரம், 1999 - மீயெல்ல கலவரம், பன்னலை அலபெடகம கலவரம், 2001 - மாவனல்லைக் கலவரம், வடதெனிய கலவரம், 2002 - பேருவளைக் கலவரம் 2014 - அளுத்கம கலவரம் 2018 - திகன கலவரம், 2019 - ஈஸ்டர் தாக்குதலுக்கு பின், குருநாகல் மாவட்ட முஸ்லிம் கிராமங்கள் தாக்கப்பட்டமை மற்றும் நீர்கொழும்பு, சிலாபம், மினுவங்கொட பகுதிகளில் பல உடமைகள் சேதப்படுத்தப்பட்டமை.

**நல்லிணக்கம்**

நல்லிணக்கம் அல்லது நல்லுறவு என்ற பதம் ஆங்கிலத்தில் ஹார்மனி (Harmony) என்று அழைக்கப்படுகின்றது. இப்பதம் கிரேக்கச் சொல்லான ஹார்மொனியா (Harmonia) என்பதிலிருந்து தோற்றம் பெற்றதாகும். (Hamonia) என்பதன் பொருள் மன இசைவு, ஒற்றுமை, சமாதானம் என்பதாகக் குறிப்பிடப்படுகின்றது. அதாவது, ''சமூகத்தில் உள்ள அனைவருமே வேறுபாடுகளின்றி, ஒருவருடன் ஒருவர் புரிந்துணர்வுடன் வாழ்வதே தான் சமூக நல்லிணக்கம்'' எனப்படுகின்றது.

***நல்லிணக்கம் பற்றிய வரைவிலக்கணங்கள்.***

Galla , ''சிவில் சமூகத்தில் சமநிலை மற்றும் கூட்டுறவைப் பேணுவதுடன் தொடர்புடைய விடயமாகும்'' எனக்குறிப்பிடுகின்றார்.

John Paul Lederach, ''மக்கள் மனதில் ஏற்படும் சமயம் சார்ந்த இரக்கமாகும்'' என்கின்றார்.Fred E.Foldvary, ''அனைத்து மக்களையும் தார்மீக மனப்பான்மையுடன் சமமாக நோக்குதல்'' என வரையறை செய்கின்றார்.

Luc Reyechler & Thenia Pappenholz, ''முரண்பட்டு நிற்பவர்களிடையே காணப்படும் மனக்கசப்பு, வன்மங்கள் என்பவற்றிற்குப் பதிலாக நட்புறவு, தோழமை என்பவற்றை ஏற்படுத்துவதாகும்'' என்கின்றனர்.

***மேற்கொள்ளப்படும் நல்லிணக்க முயற்சிகள்***

*பல்சமய சம்பாசணைகளை நிகழ்த்துதல்*

சொற்களையும் மற்றும் கருத்துக்களையும் விளங்கிக் கொள்ள மேற்கொள்ளப்படும் முயற்சியாகும். சமயங்களிடையில் சம்பாசணை என்பது மக்களை தன்னார்வமாக சம்பாசணை செய்ய வாய்ப்பை ஏற்படுத்தி பிறசமயப் பாரம்பரியங்கள், அடிப்படை உண்மைகள், அவை போதிக்கும் விடயங்களின் ஆழ்ந்த கருத்துக்கள் என்பவற்றைப் புரிந்து கொள்ள உதவியாகவும் பிற சமயம் சார்ந்த மதிப்பும் தெளிவும் கிடைக்கவும் செய்கின்றது. பல்சமயச் சம்பா'ணையில் ஈடுபடக் கூடியவர்கள் தமது சமயக் கருத்துக்களுக்களை நியாயப்படுத்தவோ, எதிர்நிலையிலே நின்று வாதிடக் கிடைத்த சந்தர்ப்பமாகவோ இதனைக் கருதக்கூடாது. அத்துடன் தங்களது சமயம் சார்ந்த கருத்துக்களையும், நம்பிக்கைகளையும் வெளிப்படையாக வெளிப்படுத்த தயாராக இருப்பதுடன் இதன் அடைவு சமாதானமாகவும் இருக்க வேண்டும்.

அதேபோன்று, கைசீட் (KAICID) நிறுவனத்தினது பயிற்சி நெறியினைப் பூர்த்தி செய்த சர்வதேச உறுப்பினர்கள் மூலமாக அவர்கள் வாழும் நாடுகளில் சமாதானத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. உதாரணமாக, தென்கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களிடையே சமயங்களிடையிலான கலந்துரையாடல் பன்மைத்துவமும் என்கிற தொனிப்பொருளில் கலாநிதி ரமீஸ் அபூபக்கர் நிகழ்த்திய செயலமர்வை குறிப்பிடலாம். இதுபோன்ற சர்வதேச மட்ட மற்றும் உள்ளூர் மட்ட நிகழ்வுகள் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த துணையாக அமையும்.

*இளைஞர்கள் மத்தியில் நல்லிணக்க முயற்சிகள்*

இலங்கையில் இடம்பெறும் இனமுரண்பாடுகளுக்கு தீர்வு காணுகிற உயரிய நோக்கில் நல்லிணக்கம் சார்ந்த முயற்சிகள் ஏற்படுத்தப்படுதல் மிகவும் அவசியமாக உள்ளமையினால் சமூகத்தைப் பிரதிபலிக்கக்கூடிய இளைஞர்கள் மத்தியில் சகவாழ்வினுடைய அவசியத்தினை வலியுறுத்துவதுடன் அவர்களுக்கான ஆக்கபூர்வமான பல வழிகாட்டல்களையும் வழங்குவது அவசியமாகும். பெண்கள் மற்றும் இளைஞர்களை இணைத்து மொனராகலை, வவுனியா, திருகோணமலை போன்ற பல மாவட்டங்களிலே தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் மூலமாக இளைஞர்கள் மற்றும் பெண்கள் சமூக ஒத்திசைவு மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் மாற்றத்தினது முகவர்களாகப் பயிற்சிகளைப் பெறுகின்றனர்.

அதுமட்டுமின்றி National Youth Council , National Youth Services , National Youth Corps , UN Volunteers , SUNFO, அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் எனப் பல்வேறு இளைஞர் அமைப்புக்கள் இலங்கை பூராகச் செயற்பட்டு வருகின்றன. உதாரணமாக, மாவனல்லை ஹிங்குள பிரதேச மாற்றுமத ஆண்களும் கலந்துகொள்ளும் வகையில் கார்ல்டன் விளையாட்டுக் கழகம், வருடாவருடம் நோன்பு காலங்களில் இப்தார் நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றது. இது சமூக நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் ஓர் சிறந்த முயற்சியாகும்.

*கல்வி மூலமான நல்லிணக்க செயற்திட்டங்கள்*

விழுமியக் கல்வி, பண்பாடுகள், கலாசாரங்கள் மற்றும் ஒழுக்கம் சார்ந்து அறிவினையும் தெளிவினையும் வழங்கும் கல்விமுறையாகும். பாடசாலையின் நோக்கம் சமூகத்திற்கு பண்பாடு, விழுமியம் மிக்க மாணவர் சமூகத்தை உருவாக்கி, நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதாகும்.

வீட்டில் பெற்றோர், உடன்பிறப்புகள் போன்றோரை சார்ந்திருந்த சிறுவர்கள் பாடசாலை, அறநெறி வகுப்புகள் என்று செல்லும் போது ஆசிரியர்கள், நண்பர்களென புதிய உறவுகளுடன் இணைந்து வாழவேண்டிய நிலைக்குட்படுகின்றனர். பல்கலைக்கழகம், கல்லூரி, தொழிலுலகு என்பதாகச் சமூகத்துடன் இணைந்து தொடர்ந்தும் வாழவேண்டிய சந்தர்ப்பங்கள் அதிகமாக ஏற்படுகின்றன.

நல்லிணக்கப் பாடத்திட்டங்கள், பல்கலைக் கழகங்களில் ஒப்பீட்டுச் சமயமும், சமூக நல்லுறவும் போன்றன காணப்படுவது சிறப்பம்சமாகும். இக்கற்கைநெறி கிழக்குப் பல்கலைக் கழகத்திலும், ஆங்கில மொழி மூலம் களனிப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்றது. தங்களது சமயத்தை மட்டுமின்றி பிற சமயங்களையும், நடைமுறைகளையும், புனித நூல்கள், வரலாற்றுச் சம்பவங்கள், விழாக்கள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றியும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் அவசியத்தன்மை போன்றவற்றையும் தெரிந்து கொள்கின்ற விதமாகவும் இப் பாடத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், பாடசாலைகளிலும் இப்பாடத்திட்டங்கள் கொண்டுவரப்படும் போது சமூகத்தினுள் மாணவர்கள் செல்ல முன்னரே ஏனைய சமயங்கள் சார்ந்த புரிந்துணர்வும் தெளிவும் ஏற்படுத்தப்படுகின்றது.

*பல்லின மாணவர்களும் கலந்துகொள்ளும் நிகழ்வுகளை நடாத்துதல்*

சமூக நல்லிணக்கம், இளம்பராய மாணவர்கள் மத்தியிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற போது அது அதிகளவான பிரதிபலன்களைப் பெற்றுத்தரும். ஏனெனில், இன்றைய மாணவ சமுதாயமே நாளைய உலகைக் கொண்டு நடாத்தப் போகின்றவர்கள். அவர்களுக்கு மத்தியில் நல்லிணக்கம், சகவாழ்வு சார்ந்த ஆழமான அறிவினையும் அதற்கான வழிகாட்டல்களையும் கொடுக்கின்ற போது சிறந்த மனிதப்பண்புகளைக் கொண்டு, மக்களுடன் இணைந்து வாழக் கூடியவர்களாகவும் மாறுவார்கள்.

மேலும், அவர்களுடைய உள, சமூக ரீதியான மாற்றங்கள் ஏனைய இன, சமய மாணவர்களுடன் புரிந்துணர்வுடனும், இணக்கமாகவும் நடக்கக் காரணங்களாக அமையும். அதேபோன்று, சமூக நல்லிணக்கத்தினைக் கட்டியெழுப்ப பல்லின மாணவர்களுக்குப் பிற

சமயங்கள் பற்றிய புரிந்துணர்வினை ஏற்படுத்துகின்ற விதமான கலை நிகழ்வுகள், கல்விச் சுற்றுலாக்கள், செயலமர்வுகள் போன்றவற்றினை மேற்கொள்ளலாம். இவ்வாறான நிகழ்வுகளின் மூலமாக மாணவர்கள் மத்தியிலே சிறந்த நட்புறவானது ஏற்படுத்தப்பட்டு சமூக நல்லிணக்கம் கட்டியெழுப்பப்படும். இம்முயற்சிகள் தேசிய மட்டங்கள், உள்ளூர் மற்றும் கிராமிய மட்டங்கள், இளைஞர்களை வலுவூட்டுகின்ற செயலமர்வுகள், பல்சமய உரையாடல்களை நிகழ்த்துதல், இரத்ததான முகாம்களை நடாத்துதல், சிரமதான ஏற்பாடுகள், விளையாட்டுப் போட்டிகளை நடாத்துதல், கல்விசார் மற்றும் ஊக்குவிப்புக் கருத்தரங்குகளை மேற்கொள்ளல் போன்ற பல செயற்திட்டங்களை முன்னெடுக்கின்ற போது புரிந்துணர்வு மற்றும் சக வாழ்வு ஏற்படுத்தப்படும்.

பெண்கள் மத்தியிலும் நல்லிணக்கத்திற்கான வழிகாட்டல்கள் வழங்கப்படுகிற போது குடும்பங்கள் அவற்றின்படி செயற்பட வழிவகுக்கும். 2023 மார்ச் 09ஆம் திகதியன்று ஜப்பான் அரசாங்கம் மற்றும் ஐ.நா பெண்கள் அமைப்பின் ஆதரவுடன் 2023-2027 காலப்பகுதியிற்கான பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தேசிய செயற்திட்டத்தினை (WSP) ஏற்றுக் கொண்டது. இலங்கை நாட்டில் நிலையானதொரு சமாதானம் மற்றும் அபிவிருத்திக்கு காரணமான இன்றியமையாத பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல்களின் பங்குதாரர்களுக்கு இடையிலான ஒரு ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதை இது நோக்காகக் கொண்டு இடம்பெற்றது.

இத்தேசியச் செயற்றிட்டத்தின் முக்கியத்துவத்தினைப் பற்றி எடுத்துதரைத்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் விவகார அமைச்சரான கௌரவ, கீதா சமன்மாலி குமாரசிங்க, கூறியதாவது ‘‘இச் செயற்றிட்டத்தை ஏற்றுக்கொண்டதன் மூலம் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலினை நடைமுறைப்படுத்துவதற்கானக் கொள்கை சார் கட்டமைப்புடன் இலங்கையானது முதலாவது முறையாக ஏற்புடையதாக்கப் பட்டுள்ளதுடன் நிர்வாகம் மற்றும் சமாதானத்தினைக் கட்டியெழுப்பும் செயன்முறைகளில் பெண்களின் அதிகரித்த பங்கேற்பையும் பிரதிநிதித்துவத்திற்கு அழைப்பு விடுக்கும்’’ என்றார்.

மேலும், அமெரிக்க முகவரமைப்பான யூசைட் இலங்கையில் நல்லிணக்கம் சார்ந்த பல்வேறுபட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு சமூகங்களை இணைப்பதற்காகச் சர்வதேசச் சமூகத்தினரை ஈடுபடுத்தும் நோக்கில் நிதியுதவிகளை வழங்கி வருகின்றது. நல்லிணக்கத்திற்கு சவாலாகவுள்ள விடயங்களுக்கு தீர்வைக் காண்பதில் இலங்கை அரசாங்கத்துடனும் உள்ளூர் சிவில் சமூகத்துடனும் இணைந்து பணியாற்றுவதாக அமைந்திருக்கும்.

நல்லிணக்கம் என்பது ஒரு செயல்முறை என்று நம்புகின்றவர்கள் நீதிக்கூடாக பயணம் செய்தே ஆகவேண்டுமென்கின்ற கட்டாயத்திற்குள்ளே தள்ளப்படுகின்றார்கள். சமாதானத்தையும், நீதியையும் நிரப்புத்தன்மை complimentarity கொண்டதாக அணுகவேண்டும்.

இலங்கை உலகளாவிய முனைப்புடன் அணுவாயுதப் பயங்கரவாதத்தையும் எதிர்த்துப் போராடக்கூடிய நாடாகவும் பயங்கரவாதத்தினை ஒடுக்குவதற்குரிய பிராந்திய ஒத்துழைப்பு மாநாட்டிற்கானத் தெற்காசிய சங்கத்தினுடைய நாடாகவும் உள்ளதுடன், பயங்கரவாத எதிர்ப்பு

தொடர்பாகப் பிராந்திய ஒத்துழைப்புக்களை அதிகரிப்பதில் அரசாங்க அதிகாரிகள் ஆர்வமும் காட்டியுள்ளனர்.

அத்துடன், இலங்கை சமாதானப் பேரவை (National Peace Council of Sri Lanka), இலங்கை நல்லிணக்க மையங்கள் (Sri Lanka Unites Reconciliation Centres), இளைஞர் அமைப்புகள் (Youth Commissions) என்பவற்றின் பங்களிப்புகளும் முக்கியமாகும். இவ்வாறாக இடையிடையே சமூகங்களிடையே நிலவிவரும் பல முரண்பாடுகளுக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் அல்லது மீண்டும் ஏற்படாத வகையில் வழிசெய்வதற்குரிய, செயற்திட்டங்களாக இவ் அமைப்புகளின் முயற்சிகளைக் கூறமுடியும்.

அதேபோன்று தான் பாடசாலை, கல்லூரி, பல்கலைக்கழகம் போன்ற கல்வி சார்ந்த நிறுவனங்களில் ஒவ்வொரு சமயங்களினதும் புனித விழாக்கள் மற்றும் பிற வைபவங்கள் என்பவற்றை அனைத்து சமயத்தவர்களுடனும் இணைந்த வகையில் முன்னெடுப்பது மூலமாக புரிந்துணர்வும் சகவாழ்வும் ஏற்படுத்தப்படும். உதாரணமாக, இப்தார் நிகழ்வுகள், தன்ஸல் நிகழ்வுகள், பொங்கல் தின விழாக்கள் என்பன மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிகழ்வுகள் பிற சமய நடைமுறைகளை அறியவும் புரிந்துணர்வுடன் செயற்படவும் வழியமைக்கின்றன.

**இலங்கையில் சமூக நல்லிணக்கத்தின் சமகாலத் தேவை**

இலங்கையில் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம், கிறிஸ்தவ சமூகங்கள் முற்காலத்தில் உறவு கொண்டு வாழ்ந்திருக்கின்றன என்பதனை வரலாறுகள் மூலமாக அறிந்து கொள்ளலாம். ஆனால், பின் இந்நிலை மாறி இடையிடையே இனரீதியான வன்முறைகளும், மதக்கலவரங்களும் தலைதூக்கிக் கடந்த மூன்று தசாப்தகால யுத்தத்தினை அனுபவித்தது மட்டுமின்றி ஏனைய இனங்களுக்கிடையிலும் குறிப்பாகச் சிங்கள- முஸ்லிம்களுக்கிடையிலும் 1915 முதல் அண்மைக்காலம் வரை இடையிடையே மோதல்கள் இடம்பெற்றே வந்துள்ளன.

மேலும் இன்று அவசியமாக, அவசரமாகத் தேவைப்படுவது சமூகங்களுக்கிடையிலான நல்லுறவும், சமாதானமும் ஆகும். இலங்கையின் சமூகச் சூழலைப் பொறுத்தவரையில் ஒரு இனத்தவர் அடுத்த இனத்தவர்களோடு பகைமை கொண்டு விரோதியாக வாழ்வதென்பது சாத்தியமற்ற ஒன்றாகும். ஏனெனில், இலங்கையின் புவியியல் பின்னணியும் அத்தகையதொரு பண்பினையே கொண்டுள்ளது. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தை எடுத்துக்கொண்டாலும் ஒன்றுக்கு மேற்பட்ட சமூகத்தவர்கள் வாழ்கின்றனர். எனவே, இலங்கையைப் பொறுத்தவரையில் எல்லா சமூகத்தவர்களும் சுமூகமான முறையிலே உறவு கொண்டு வாழவேண்டும்.

இலங்கையில் சமூக நல்லிணக்கத்தை வேண்டி நிற்கும் காரணிகளில் கலவரங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. இலங்கையின் வரலாற்றில் ஒவ்வொரு சமூகமும் அடுத்த சமூகத்தினை வெறுத்து வாழ்ந்ததாலும் ஒதுக்கி வாழ்ந்ததாலும் அதபோன்று புரிந்துணர்கின்ற தன்மையின்மையாலும் பல பிரச்சினைகளும், கலவரங்களும் ஏற்பட்டன. 1915இல் கண்டியில் சிங்கள-முஸ்லிம் சமூகத்தவர்களிடையே ஏற்பட்ட கலவரம் ஒவ்வொரு சமூகத்தவரும்

மற்றைய சமூகத்தவர்களை விரோத மனப்பான்மைகளோடு நோக்குகின்ற தன்மைக்கு இட்டுச் சென்றது. ஆனாலும் கூட தற்போது வரையில் இடையிடையே மோதல் சம்பவங்கள் நடைபெற்று தான் வருகின்றன.

இவ்வாறான ஒரு பின்னணியில் 2019ஆம் ஆண்டு முழு உலகையும் ஆட்டிப்படைத்த கொவிட்19 கொரோனாப் பெருந்தொற்றின் பின்னராக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினாலும் மக்களுடைய மனங்களில் சற்று மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. தமது உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கவும் அநீதிகளுக்கு எதிராகப் போராடவும் அனைத்துச் இனங்களையும் சேர்ந்த மக்களும் ஒன்றிணைந்தனர். தமது பழைய பிரச்சினைகளையும் மற்றும் குரோதங்களையும் வைத்துக்கொண்டு காலங்காலமாக முரண்பட்டுக் கொள்ளாது நல்லிணக்கத்தினை நோக்கிப் பயணிக்க வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

**முடிவுரை**

வணிகத் தொடர்புகள், திருமண உறவு போன்றன அரேபியர்கள் சிங்களவர்களுடன் இணைந்து, இலங்கையில் குடியேறி வாழ வழிவகைகளை ஏற்படுத்தி கொடுத்ததுடன் பலமான உறவினை கட்டியெழுப்பவும் காரணமாயின. இருந்தபோதும் 1915ஆம் ஆண்டு முதல் சிங்கள, முஸ்லிம் விரிசலானது ஆரம்பமானது. இதனுடைய ஆரம்பப் புள்ளியிலிருந்து துவக்கிவிடப்பட்ட மோதல்கள் 2019ஆம் ஆண்டு வரையில் இடையிடையே இடம்பெற்று வருகின்றன. அவ்வாறாக இடம்பெற்ற முரண்பாடுகள் உடல், உள, சமூக, பொருளாதார, கலாசார ரீதியில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தியதுடன் இரு சமூகத்தவர்களுக்கிடையிலும் நீண்ட காலமாக நிலவிய நல்லிணக்கத்தையும் பாதித்தன.

பெரும்பாலும் தனிநபர் மற்றும் தனிக் குழுக்களுக்கிடையில் ஆரம்பமாகிப் பின் தனி நபர்கள் அல்லது தனிக் குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகங்களைச் சார்ந்த மோதல்களாக மாற்றமடைந்ததுடன், பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்த்துக்கொள்ள முடியுமான அநேக பிரச்சினைகள் வீண் வன்முறைகளால் பாரிய அழிவுகளை ஏற்படுத்தின. மோதல்கள் இடையிடையே சந்தர்ப்ப சூழ்நிலைகளின் காரணமாக இடம்பெற்றாலும் கூட முற்றுமுழுதுமாக இரு சமூகங்களுக்குமிடையில் நல்லிணக்கம் இல்லையென முடிவுசெய்ய முடியாது. ஏனெனில், கலவரங்கள் இடம்பெற்ற பகுதிகளில் இரு சமூக மக்களும் நீண்டகாலம் நல்லிணக்கத்தோடு வாழ்ந்து வந்திருக்கின்றார்கள் என்பதற்குச் சான்றுகள் காணப்படுகின்றன.

இந்நிலையில் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மை முஸ்லிம்களுக்கும் இடையில் இடம்பெற்ற மோதல்களையும் இரு சமூகங்களுக்குமிடையில் நல்லிணக்கத்தினை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையும் மக்களறிந்து செயற்படுவதுடன், மோதல்கள் களையப்பட்டு நல்லிணக்கம் ஏற்படுத்தப்படுதல் அவசியமாகுமென்பது இவ்வாய்வின் முடிவாகக் கூறப்படுகின்றது.

**பரிந்துரைகள்**

- அடிப்படைவாதக் குழுக்களின் செயற்பாடுகள் தான் மோதல் சம்பவங்கள் அதிதீவிரமான நிலையினை அடையக் காரணமாக அமைந்தன எனலாம். உதாரணமாக, சிங்ஹளராவய, பொதுபலசேனா, ஐ.எஸ்.ஐ.எஸ் போன்ற அடிப்படைவாத சிந்தனைகள் கொண்ட

எந்தவொரு அமைப்பும் செயற்படுவதற்கு அரச ஆதரவு வழங்கப்படாது சட்டரீதியாக இடை நிறுத்தப்பட வேண்டும்.

- நல்லிணக்கத்தை ஏற்படுத்தப் பிரதான தடையாக மொழிப் பிரச்சினை காணப்படுகின்றது. சிங்கள சமூகத்தினர் சிங்கள மொழியினையும் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்கள் தமிழ் மொழியைப் பேசக்கூடிய அமைப்பும் காணப்படுகின்றது. எனவே இவ்விரு மொழிகளையும் மற்றும் ஆங்கிலம் போன்ற மொழிகளையும் அனைவரும் கற்றுக் கொள்ளும் வகையில் அரசாங்கம் செயற்திட்டங்களைக் கொண்டுவருதல் வேண்டும்.
- 1915ம் ஆண்டு தொடக்கம் 2019 போன்ற அண்மையக் காலப்பகுதி வரை இடம்பெற்ற அநேகமான கலவரங்களினை நோக்குகின்ற போது புரிந்துணர்வின்மை தான் அவற்றினைத் தோற்றுவிப்பதற்கான மிகப்பிரதான காரணமாக அமைந்ததெனலாம். எனவே, இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் நாட்டில் மோதல்களைத் தடுப்பதற்கு மிகச்சிறந்த வழிமுறையாகக் காணப்படும் என்பதில் ஐயமில்லை. எனவே, கலவரங்கள் இடம்பெற்ற பகுதிகளில் இரு சமூகங்களுக்குமிடையில் தொடர்ச்சியாக புரிந்துணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலான கலந்துரையாடல்கள், சமயத் தலைவர்களிடையில் உரையாடல்கள், கிராமிய, பிரதேச மட்டங்களிலான உரையாடல்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்தல் வேண்டும்.
- இலங்கை அரசியல் அமைப்பினூடாக நீண்ட காலமாகக் கூறப்பட்ட விடயங்களைச் சரிவர முறையில் அமுல்படுத்துவதுடன் அனைத்து இனங்களையும் சமமாக வழிநடாத்தக்கூடிய வகையில் நல்லிணக்கம் தொடர்பிலான விழிப்புணர்வுத் திட்டங்களைச் சாதாரண மக்கள் மத்தியிலிருந்து உயர்மட்ட மக்கள் வரையில் முன்னெடுப்பது மிகவும் அவசியமாகும்.
- மோதல்களை ஏற்படுத்தும் விடயதானங்கள், தடுக்கும் வழிவகைகள் என்பன குறித்த விழிப்புணர்வு நாடகங்கள், கருத்தரங்குகள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களை மத்தியில் ஏற்படுத்துவதனூடாக மோதல்களின் பாரதூரங்களை, விளைவுகளைச் சகலரும் உணர்ந்து செயற்படும் நிலை ஏற்படும்.
- கல்வித் திட்டங்களினூடாக பல சமூக மாற்றங்களைக் கொண்டுவர முடியும். அதாவது சமயக்கல்வி, விழுயக்கல்வி, ஒப்பீட்டுச்சமயம் என்பன போன்ற பாடத்திட்டங்களுக்குப் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்வியியல் கல்லூரிகள் என்பவற்றில் பிரதான முன்னுரிமை கொடுப்பது சிறந்தது.
- மோதல்களை ஏற்படுத்தும் காரணிகள், விளைவுகள் போன்றன பற்றி ஊடகங்கள் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும். உதாரணமாக குறுந்திரைப்படங்கள், நாடகங்கள், சிறுவர் கார்டூன்கள், விழிப்புணர்வு காணொளிகளால் முரண்பாட்டு விளைவுகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் நல்லிணக்க முயற்சிகளின் அவசியப்பாட்டினை உணர்த்தலாம்.
- குறித்த சமய அடையாளங்கள், நடைமுறைகள் என்பவற்றை இழிவுபடுத்தும் வகையில் ஊடகங்களின் செயற்பாடுகள் அமையக்கூடாது. முகப்புத்தகம், வட்சப், இணையத்தளம் போன்ற சமூக வலைத்தளங்களின் மூலமாகப் பிற சமயத்தினரையும் அவர்களுடைய வழிபாடுகளையும், சமயம் சார்ந்த நடைமுறைகளையும் பற்றி ஏளனமாகவும், தவறான வகையிலும் பதிவுகளை வெளியிடுகின்றனர். அதாவது, கருத்தியல் ரீதியான பல்வேறு வன்முறைகளைத் தூண்டுவதாக இவை அமைந்துள்ளன.

எனவே, இவ்வாறான பரிந்துரைகளை ஏற்று நடப்பதனூடாக மோதல்களைத் தடுத்து நமது நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்தலாம்.

**உசாத்துணைகள்**


Aliff, S.M. (2015). *Post-war conflict in sri lanka : violence against sri Lankan muslims and Buddhist hegemony*.SciPress Ltd.

Dennis MvGilvary, B and Mirak Raheem. (2001). Muslim Perspectives on the Sri Lankan Conflict. East-West Center.

Jayandeva Uyangoda.(2001). Ethnic conflict in sri lanka : Changing Dynamic. East-West Center Washington.

Johan Galtung.(1967).Theories of Peace. International Peace Research Institute Oslo.

Johansson, A. (2019). *Pragmatic muslim politics*. Springer.

Mohamed Frook Fawas. (2021).Nonviolence Response to Ethnic Conflicts : The Case of Muslims in Sri Lanka. University of oslo Norway Peace building. Retrieved Aprol 19,2023, from http://www.peacefotharmonny.org

Reconciliation-after-violent-conflict. Retrieved Aprol 19,2023,from http://www.idea.int

அனஸ், எம்.எஸ்.எம், அமீர்தீன், வீ, வஸீல், ஏ.ஜ.(2003). *இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும்.* இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

கிருஷ்ணமோகன், த. (2021). *மோதல் தீர்வு கற்கைகளும் அறிமுகமும்.* குமரன் புத்தக இல்லம்.

கீதபொன்கலன், எஸ்,ஐ. (2004). *சமூக மோதல் எண்ணக்கருக்கள்.* டிரீம்லேண்ட் பிரின்டர்ஸ்.

சமய நல்லிணக்கம் ஓர் அறிமுகம். Retrieved Aprol 19,2023, from http://alltamiltips.com

சிங்கள மற்றும் முஸ்லிம் உறவை வலுவூட்டும் ஜகார்த்தா செயலமர்வு. Retrieved Aprol 19,2023, from https://vidivelli.lk

சிவானந்தமூர்த்தி, க.(2010). முரண்பாடுகளும்: தீர்வுகளும் (கட்டுரையாக்கம்).

நல்லிணக்கம் ஓர் அறிமுகம். Retrieved Aprol 18,2023, from http://www.beyondintractability

மஹிந்த தீகல்லே.(2003). *இலங்கையில் இன முரண்பாடுகளும் பௌத்தமும், சமாதானமும்.* நோர்வே பௌத்த சங்கம்.

முஹம்மது சமீம், அ. (1998). *ஒரு சிறுபான்மைச் சமூகத்தினது பிரச்சினைகள்.* ரிசானா பப்ளிஸர்ஸ்.

ரிஸ்வி, எம்.டி.எம். (2019). *இலங்கை வரலாற்றில் மதக்கலவரங்களும் வன் முறைகளும், தீர்வுகளும் முன்மொழிவுகளும்.*கிழக்குப் பல்கலைக்கழகம்.

ஸஜீதா. (2017).யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் இன நல்லிணக்கம்.